R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2018-2020
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month at Batlagundu Post office.
July 2018






## தமிழகத்தில் தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் ஊழியங்கள்

*Our Radio Program:* Sri Lanka Radio SW 31 Meter Every Saturday 5.15 P.M & Our TV Program: Nambikkai TV Every Saturday 8.00 P.M & Tamilan TV Every Thursday 6.00 P.M

*Cell : 94435 58041*
*Phone : 04543 263 278*
*E-Mail arjunanglory@gmail.com*
*Office Address*
*The Word of Christ, D/5 Rajan Nagar*
*Batlagundu -624202, DINDIGUL DIST*
*TAMIL NADU INDIA*

To

Postman Remarks (If Undelivered):
- ☐ Refused
- ☐ No such person
- ☐ Address insufficient
- ☐ Left without instructions
- ☐ Deceased

*Our Postal Address:*
THE WORD OF CHRIST
POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Owned and published by B.Arjunan
from 17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan



தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 18 ஜூலை 2018 கனி 8

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக – கொலோசெயர் 3:16

THE WORD OF CHRIST

ஆசிரியர்
B. அர்ஜுனன்

**Arjunan in Tamil:**
TV: Every Saturday 8:00 - 8:30 pm on Nambikkai TV.
Every Thursday 6:00 - 6:30 pm on Tamilan TV
Radio: Every Saturday 5:15 - 5:30 pm on 31 meter band on Sri Lanka radio.

**Hindi TV program:** Sunny, Francis, & Vinay David speaking. Sunday &Tuesday (7:00-7:30) pm on Shubhasandesh Hindi Channel

**P. K. Varghese in Malayalam:**
Every Saturday 6:00-6:30 am on Jai Hind channel TV.

**Philemon & Kingsley in Tamil:**
Tamilan TV: Sunday 6:45 - 7:00 am.
Nambikkai TV: Friday 6:00 - 6:30 am.

**Rajanayagam in Tamil:**
Tamilan TV: Monday 7:00-7:15 am
Thursday 9:30-10:00 pm.
Saturday 7:15-7:30 am.

**P. R. Swamy and Douglas in Tamil:**
Every Sunday to Wednesday at 5:30-5:45 pm on 31 meter band of Sri Lankan radio.

**Joshua & Ricky Gootam in Telugu:**
Every Sunday at 6.00 p.m.on Subhavartha channel
Every Wednesday at 6:30 p.m. on Rakshana channel
Every Thursday at 11:00 a.m. on Rakshana channel
Satyavani T.V. online: www.sakthitv.in
Every Wednesday & Friday at 8:00 pm.
Every day at 7:30 a.m. and 3:30 p.m. on Kanthi TV in A. P. only.

World Gospel Media
Evangelism

**THE WORD OF CHRIST**
Monthly Magazine
Editor
B.ARJUNAN

திவேர்ட் ஆப் கிரைஸ்ட்
மாத இதழின் உள்ளே...
ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
ஜெர்ரிபேட்ஸ் மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15
"The Churches Of Christ Salute you" Romans 16:16

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA



# வேத அறிவுப் போட்டி எண்: 215

போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை பின்வரும் மாத இதழில்களில் காண்க.

1. மேகங்கள் எவருடைய பாதத்தூளாயிருக்கிறது?
2. பவுல் எந்த இருவருக்கு ஞானஸ்நானம் கொடுத்தார்?
3. பர்வதங்கள் எவரைக்கண்டு நடுங்கின?
4. நீங்கள் மனந்திரும்புகிறதற்கேதுவாகத் துக்கப்பட்டதற்காக சந்தோஷப் படுகிறேன் என்று எழுதும் அப்போஸ்தலன் யார்?
5. கர்த்தர் நன்மைசெய்வதும் இல்லை தீமைசெய்வதும் இல்லையென்று தங்கள் இருதயத்தில் சொல்லுகிறவர்களுமான மனுஷரை கர்த்தர் என்ன செய்வார்?
6. ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான் அது அவனுக்கு என்னவாக எண்ணப்பட்டது?
7. ஜனத்தில் மீதியான எல்லாருடைய ஆவியையும் எழுப்பினபடியால் அவர்கள் எவருடைய ஆலயத்திலே வேலைசெய்தார்கள்?
8. புறஜாதிகள் சுவிசேஷத்தினாலே உடன் சுதந்தரருமாய், ஒரே சரீரத்திற்குள்ளானவர்களுமாய், கிறிஸ்துவுக்குள் அவர் பண்ணின வாக்குத்தத்தத்துக்கு உடன் பங்காளிகளுமாயிருக்கிறார்களென்கிற இந்த இரகசியத்தை வெளிப்படுத்தியவன் யார்?
9. எந்த வீதிகளில் முதிர்வயதினாலே தங்கள் கைகளில் கோலைப்பிடித்து நடக்கிற கிழவரும் கிழவிகளும் குடியிருப்பார்கள் என்று சொல்லப்பட்டது?
10. எனக்கு லாபமாயிருந்தவைகளெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினவன் யார்?

**வாழ்த்துகிறோம்...**

தொடர்ந்து பலவருடங்களாக இவ்விதழில் வரும் வேத அறிவுப்போட்டியில் கலந்து கொண்டு தூத்துக்குடி மாவட்ட அளவில் வெற்றி பெற்று வேதாகமம் பரிசாக பெற்றவர்களின் புகைப்படம்



சிறுவர் பகுதி

# சரட்டையாகிலும்...

வேதவாசிப்பு: ஆதியாகமம் 14:21-24



ஆபிரகாமைப் பற்றி நாம் அநேகமுறை கேள்விப்பட்டிருக்கிறோம். அவர் நமது விசுவாசத்தின் தந்தை என்று அழைக்கப்படுகிறார். நம்முடைய தேவனாகிய கர்த்தர் இந்த ஆபிரகாமை அபரிவிதமாக ஆசீர்வதித்திருந்தார். எப்படியென்றால் “நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய், உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன்; பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றார்”. இந்த ஆசீர்வாதத்துக்கு ஆபிரகாம் பாத்திரவனாயிருந்தார். சரி, என்ன சரடு என்று கேட்கிறீர்களா? ஆபிரகாம் பிறனுக்குள்ள ஒரு சாதாரண சரட்டைக் கூட இச்சிக்கவில்லை.

சோதோமின் ராஜா ஆபிராமை நோக்கி: ஜனங்களை எனக்குத்தாரும், பொருள்களை நீர் எடுத்துக்கொள்ளும் என்றான். அதற்கு, ஆபிராம் சோதோமின் ராஜாவைப்பார்த்து: ஆபிராமை ஐசுவரியவானாக்கினேன் என்று நீர் சொல்லாதபடிக்கு நான் ஒரு சரட்டையாகிலும் பாதரட்சையின் வாரையாகிலும் உமக்கு உண்டானவைகளில் யாதொன்றையாகிலும் எடுத்துக்கொள்ளேன் என்று வானத்தையும் பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவனாகிய கர்த்தருக்கு நேராக என் கையை உயர்த்துகிறேன் என்றார்.

பொருள்கள் என்றால் நமக்கு கொள்ளை ஆசை. இதைத்தா, அதைத்தா என்று இருக்கிற எல்லாவற்றையும் கேட்டுவாங்கிவிடுவோம். ஆனால் ஆபிரகாமோ அப்படியில்லை. கர்த்தருக்கு நேராக என் கையை உயர்த்துகிறேன் என்றார். ஏன் நாமும் பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சிக்காது நம்முடைய தேவனுக்கு நேராக ஜெபித்து பெற்றுக்கொள்ளக்கூடாது? முடியும் அல்லவா? அப்படியானால் நாமும் விசுவாசத்தின் தகப்பன் ஆபிரகாமைப்போல பிறனுக்குள்ள ஒரு சின்ன பென்சிலைக்கூட எடுத்துக்கொள்ளாமல் தேவனிடத்தில் கேட்போம். அவர் ஆபிரகாமை ஆசீர்வதித்தது போல நம்மையும் ஆசீர்வதித்து வழிநடத்துவார்.

**மனப்பாட வசனம்**

“வானத்தையும் பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவனாகிய கர்த்தருக்கு நேராக என் கையை உயர்த்துகிறேன்” (ஆதியாகமம்14:23)

பிறனுடைய வீட்டை இச்சியாதிருப்பாயாக; பிறனுடைய மனைவியையும், அவனுடைய வேலைக்காரனையும், அவனுடைய வேலைக்காரியையும், அவனுடைய எருதையும், அவனுடைய கழுதையையும், **பின்னும் பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக** – யாத்திராகமம் 20:17



திவேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் - 18 ஜுலை -2018 கனி - 8

ஆசிரியருரை

# இயேசுவைப் பின்தொடர்
## Follow Jesus




**இ**ன்றைக்கு நாம் யாரை மாதிரியாக கொள்ளவேண்டும்? அநேகர் தங்களுடைய மூதாதையர்களை மாதிரியாகக் கொண்டு செயல்படுகின்றனர். இன்னும் அநேகர் தங்களுடைய மத தலைவர்களை மாதிரியாக கொள்ளுகின்றனர். சிலர் தங்களை வழிநடத்துகிற ஆசானை மாதிரியாகக் கொள்ளுகின்றனர். உலகத்தில் உள்ள எல்லோருக்குமே மாதிரியாகக் கொடுக்கப்பட்டவர் நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து. அவரையே நாம் எல்லோரும் மாதிரியாக கொள்ளவேண்டும். "இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார்" என்று பேதுரு தம்முடைய நிருபத்தில் எழுதியிருக்கிறார் (1பேது.2:21). உலகத்தில் எத்தனை மாதிரிகள் இருந்தாலும் நாம் இயேசுவின் மாதிரியை நோக்கிப்பார்க்கவேண்டும். ஏனெனில் அவரே தேவனால் ஏற்படுத்தப்பட்ட மாதிரியாக இருக்கிறார். எல்லோரும் பாவம் செய்து தேவமகிமையற்றவர்களாகபோய் விட்டார்கள். தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட ஆண்டவராகிய இயேசு ஒருவரே தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுகிறவராய் உலகத்தில் தேவனுடைய சித்தத்தை செய்து நிறைவேற்றினார்.

இந்த உலகம் அவரை ஏற்றுக்கொள்ளாமல் அவரை மரணஆக்கினைக்குள்ளாக தீர்த்து; "இயேசுவைப் பிடித்துக்கொண்ட மனுஷர் அவரைப் பரியாசம்பண்ணி, அடித்து, அவருடைய கண்களைக் கட்டி, அவருடைய முகத்தில் அறைந்து; உன்னை அடித்தவன் யார், அதை ஞானதிருஷ்டியினால் சொல் என்று அவரைக் கேட்டதுமன்றி, மற்றும் அநேக தூஷணவார்த்தைகளையும் அவருக்கு விரோதமாகச் சொன்னார்கள்" (லூக்.22:63-65). இத்தனை பாடுகளையும் அவர் தேவனுடைய குமாரனாயிருந்தும் நம்மை மீட்கும்படியாக பாடுபட்டார். அவரால் உண்டாகக்கப்பட்ட மனுஷர்கள் அவருக்கு விரோதமாக செயல்பட்டனர். இதை நினைக்கும்போது அவர் எவ்வளவாய் சகித்தார் என்பதை நாம் எண்ணிப்பார்க்கவேண்டும். நம்மை ஒருவர் இந்தவிதமாக செய்தால் நாம் பொறுமையோடு இருப்போமா? அவரோ வாய்திறவாத ஒரு ஆட்டைப்போல

கொண்டுபோகப்பட்டார். எத்தனை அவமானங்களை சகிக்கவேண்டுமோ அத்தனை அவமானங்களையும் சகித்தார். "அவர்மேல் துப்பி, அந்தக் கோலை எடுத்து, அவரைச் சிரசில் அடித்தார்கள்" (மத்.27:30). இத்தனை பாடுகளையும் ஆண்டவர் எதற்காக சகித்தார்? உங்களையும் என்னையும் பாவத்திலிருந்து மீட்க்கும்படியாகவும், பாடுகளிலே பொறுமையோடிருக்கும்படியாகவும் நமக்கு மாதிரியாக செயல்பட்டார். வேதத்தில் வாசிக்கிறோம், "இயேசுவும் தம்முடைய சொந்த இரத்தத்தினாலே ஜனத்தைப் பரிசுத்தஞ்செய்யும்படியாக நகரவாசலுக்குப் புறம்பே பாடுபட்டார். ஆகையால் நாம் அவருடைய நிந்தையைச் சுமந்து, பாளயத்துக்குப் புறம்பே அவரிடத்திற்குப் புறப்பட்டுப்போகக்கடவோம்" (எபி.13:12,13). இயேசுவை நாம் ஒவ்வொருநாளும் பின்தொடரும்போது அவருடைய பாடுகளை நாம் நினைத்து அவர் பாடுபட்ட இடத்திற்கு நம்மை கொண்டுசெல்லவேண்டும். அப்பொழுதுதான் நமக்குள்ளாக தாழ்மை ஏற்படும். சிலவேளைகளில் நாம் ஆண்டவரின் பாடுகளை நினைக்க தவறிவிடுகிறோம். அந்தவேளைகளில் பிசாசு நம்முடைய இருதயங்களில் களைகளை விதைத்துவிடுவான். தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்ற வசனத்தின்படி ஆண்டவர் இயேசுவைப்போல உங்களை முற்றிலும் தாழ்த்துங்கள்.

அவர் பாவஞ்செய்யவில்லை என 1பேது.2:22-ல் படிக்கிறோம். ஆம், அவர் பாவ உலகத்தில் இருந்தார், ஆனால் அவர் பாவஞ்செய்யவில்லை. நீங்களும் நானும் பாவ உலகத்தில் இருந்துகொண்டு பாவிகளாகவே இருக்கிறோம். தேவனால் அனுப்பப்பட்ட அவருடைய குமாரனாகிய இயேசு உலகத்தில் பிறந்து நம்மைப்போல மாம்சத்தில் வெளிப்பட்டார். அவருக்கும் பசியுண்டாயிற்று, ஆனால் அவர் நம்மைப்போல பாவம் செய்கிறவராயிருக்கவில்லை. பாவம்அறியாதவராய் இருந்தார். ஆனால், "மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக்கூடாததைத் தேவனே செய்யும்படிக்கு, தம்முடைய குமாரனைப் பாவமாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்" என காண்கிறோம் (ரோ.8:3). இது தேவனுடைய மாபெரும் திட்டமாயிருக்கிறது. ஏன் இந்த திட்டத்தை தேவன் ஏற்படுத்தினார்? தம்முடைய ஜனங்களை இரட்சிக்கும்படியாக தேவன் தம்முடைய குமாரனை மாம்சத்தில் மரிக்கும்படி ஒப்புக்கொடுத்தார். அவர் மாம்சத்தில் மரித்ததினாலே பாவத்தை சிலுவையில் ஜெயித்து ஆதிமுதலாக மனுஷனை ஆண்டு கொண்டுவந்த பாவத்தை ஆக்கினைக்குள்ளாக தீர்த்தார். ஆகையால் பாவத்திற்கு அடிமைகளாயிருந்த நம்மை மீட்டு நீதிக்கு அடிமைகளாக மாற்றினார். மேலும், "நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார். அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்" என பேதுரு நமக்கு தெளிவுபடுத்துகிறார் (1பேது.2:24). நம்முடைய பாவங்களைச் சிலுவையில் ஆண்டவராகிய இயேசு சுமந்தார். அதினாலே நாம் பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்கிறோம். சிலர் சிலுவையில் நம்முடைய நோய்களை சுமந்துதீர்த்தார்



## 31 வது வாசகர் கருத்தரங்கில் நாங்கள் சந்தித்த சகோதரி வசந்தா அவர்களைப்பற்றி....



சிவகங்களை மாவட்டம் காளையார்கோவில் அருகேயுள்ள மேம்பல் ஊரில் பல வருடங்களாக கிறிஸ்துவுக்காக வாழும் ஒரு சகோதரி இவர்கள். இவர்களுக்கு மூன்று பெண்பிள்ளைகள் திருமணமாகி நலமுடம் பல இடங்களில் இருக்கிறார்கள். இவர்களுக்கு சொந்த ஊரில் உருவான துன்பங்களுக்கு கணக்கில்லை. தன்னுடைய சொந்த நிலத்தை பெற 25 வருடங்கள் கோர்ட், கேஸ் என நடையாக நடந்திருக்கிறார்கள். எருசலேம் பல முறை தீ கொழுத்தப்பட்டதைப்போல இவர்களுடய விவசாய நிலம் வன்முறையாளர்களால் எரிக்கப்பட்டது.

இவர்கள் ஆராதித்து வந்த தேவன் சகல உபத்திரத்திலும் இவர்களை காத்தார். நாங்கள் 31 மாவட்டங்களிலும் வாசகர்களை சந்தித்து விட்டு கடைசி மாவட்டமாக சிவகங்கையை சந்திதோம். இவர் எங்களுடைய தொலைக்காட்சி நேயர் கணவனும் மனைவியுமாக வயதான காலத்திலும் கர்த்தரை விடாது பிடித்துக்கொண்டு எங்களைப்போல சுவிசேஷகர்களை ஏற்று உபசரிக்கின்ற அன்பான குடும்பம். மேலும் இவர்களைப் பற்றி எழுத கொள்ளை ஆசை எனக்கு உண்டு ஆனால் காகிதத்தில் இடமில்லை. நீங்களும் இவரைப்போல உங்கள் ஊரில் கிறிஸ்துவின் நாமம் மகிமைக்காக வாழுங்கள்...

***கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம் – பிலி.1:21***

### வேத அறிவுப்போட்டி எண் 212 ல் வெற்றிபெற்றவர்கள்

46.Mrs.ஞானம்பிலிப் - கோவை
47.Mrs.அன்னம்மாள் - தூத்துக்குடி
48.Mrs.கிறிஸ்டோபல் - கோவை
49.Mrs.எபிநேசர் எட்வேர்டு - கடலூர்
50.Mrs.ஃபுளோராஎழில் - ஆம்பூர்
51.Mrs.சுசிலாராஜசிங் - வள்ளியூர்
52.D.அருணா - பரமத்தி
53.Mrs.பியூலாஜேசுராஜன் - புதுச்சேரி
54.Mrs.ஜெயாமேரிதாய் - திண்டுக்கல்
55.J.ஜான்சி - ஆனைமலை
56.T.ஏஞ்சலின்நேசமலர் - சாஸ்தாபுரம்
57.Mrs.சாந்தாபழனி - தருமபுரி
58.S.தங்கம் - கன்னியாகுமரி
59.Mrs.வசந்தாரபீந்திரன் - தூத்துக்குடி
60.Mrs.இந்திராஜெபக்கனி - நாசரேத்
61.Mrs.தேவபுஷ்பம் - நாசரேத்
62.S.ரெஜினாசெல்வராஜ் - நாசரேத்
63.N.ஜெபத்தாய் - நாசரேத்
64.J.ஜாய்கமலம் - நாசரேத்
65.S.சாந்தகுமாரி - நாசரேத்
66.J.விக்டர்சுவிசேஷமுத்து - ஆனந்தபுரம்
67.Miss.சாந்தாதேவி - தேனி
68.Mrs.ஃபிராங்கலினாஜான் - ஊட்டி
69.Mrs.பொன்னிவிக்டர் - திருப்பூர்
70.Mrs.சரோஜினி - தாராபுரம்
71.Mrs.கிரேஸ்சங்கீதா - தூத்துக்குடி
72.Mrs.ஜெமிநெல்லையா - கோவை
73.J.பிரேமலதா - கோவை



**வீட்டு ஒரு மரம் வளர்ப்போம்**

### வேத அறிவுப்போட்டி எண் 213 ல் வெற்றிபெற்றவர்கள்

38.Mrs.கிறிஸ்டோபல் - கோவை
39.Mrs.ஜெயமணிராஜம்மாள் - கடலூர்
40.K.S.மாணிக்கவாசகம் - திருச்சி
41.E.அதிசயம் - பனைகுடி
42.Miss.சாந்தாதேவி - தேனி
43.S.சாந்தகுமாரி - நாசரேத்
44.S.ரெஜினாசெல்வராஜ் - நாசரேத்
45.N.ஜெபத்தாய் - நாசரேத்
46.Mrs.தேவதா தேவப்பிரியம் - சென்னை
47.Mrs.தேவபுஷ்பம் - நாசரேத்
48.Mrs.எபிநேசர் எட்வேர்டு - கடலூர்
49.S.ஜாய்சந்திரகாந்தா - நல்லூர்
50.M.ராமசந்திரன் - ஒட்டநத்தம்
51.Sis.கஸ்தூரி - ஒட்டநத்தம்
52.Mrs.சுசிலாராஜசிங் - வள்ளியூர்
53.Mrs.தேவிராஜசிங் - திருப்பூர்
54.R.அனிதாநெகேமியா - ரெட்டியார்பட்டி

**வேத அறிவுப்போட்டி**
**எண் 212 ன் விடைகள்**

| | |
|---|---|
| 1.கோரேஸ் | - எஸ்றா.5:15 |
| 2. பவுல் | - 2தெச.1:3 |
| 3. நெகேமியா | - நெகே.9:3 |
| 4. பவுல், தீமோத்தேயு | - 1தீமோ.4:13 |
| 5. ஆமான் | - எஸ்த.3:5 |
| 6. ஆம் | - 2தீமோ.4:4 |
| 7. யோபு | - யோபு 23:11 |
| 8. ஆம் | - தீத்து 1:7 |
| 9. தாவீது | - சங்.94:18 |
| 10. மாறாதவராயிருக்கிறார் | - எபி.13:8 |

**வேத அறிவுப்போட்டி**
**எண் 213 ன் விடைகள்**

| | |
|---|---|
| 1. தீமையை வெறுப்பதே | - நீதி.8:13 |
| 2. சிக்குண்டு | - யாக்.1:14 |
| 3. அல்ல | - பிர.3:19 |
| 4. தேவன் | - 1பேது.1:4 |
| 5. நீங்கள் | - ஏசா.43:12 |
| 6. தேவனால் | - 1யோவா.4:3 |
| 7. எரேமியா | - எரே.6:14 |
| 8. யோவான் | - வெளி.1:17 |
| 9. அவர்களுடைய | - எசேக்.33:17 |
| 10. பேதுரு | - மத்.17:24 |

**வேத அறிவுப்போட்டி**
**எண் 212 ல் வெற்றிபெற்றவர்கள்**

| | |
|---|---|
| 1.Tmt.மரகதம் திரவியம் | - கோம்பை |
| 2.A.டேவிட்ஜெயச்சந்திரன் | - மதுரை |
| 3.E.ஜாய்ஹெலன்புனிதா | - சென்னை |
| 4.R.ஞானசிரோன்மணி-ஊர்மெச்சிகுளம் | |
| 5.B.ஞானதீபம் ஜெபராஜ்- இடையான்குடி | |
| 6.R.ஜெபக்கனி | - கூமாபட்டி |
| 7.P.A.ஜெபஸ்டியன் | - சென்னை |
| 8.Mrs.பாலின்மார்ட்டின் | - காரைக்குடி |
| 9.Mrs.நிர்மலாவின்செண்ட் | - புங்கமுத்தூர் |
| 10.A.ஆலிஸ்குணசீலி | - தூத்துக்குடி |
| 11.J.செல்வராஜ் | - தூத்துக்குடி |
| 12.D.அன்புக்கமலம் | - காரைக்குடி |
| 13.J.ஆலிவ் | - கோவை |
| 14.Mrs.ரத்னாபாய்பிரசாத் | - மதுரை |
| 15.Mrs.ருக்மணிஜெயசீலன் | - தேனி |
| 16.P.சந்திராடேனியேல் | - நஞ்சான்குளம் |
| 17.T.ராஜாத்தி | - கோம்பை |
| 18.S.ஜாய்சந்திரகாந்தா | - நல்லூர் |
| 19.S.R.பெரியசாமி | - சேலூர் |
| 20.S.A.சாமுவேல் | - மரவபாளையம் |
| 21.Mrs.ரூத்ஜெயராணி | - பெருமாள்புரம் |
| 22.Mrs.அல்லிராணிகாட்வின் | - சென்னை |
| 23.Mrs.ஜாய்மேத்யு | - வி.கே.புரம் |
| 24.Mrs.ஜெபசீலிஜெயக்கொடி | - திருச்சி |
| 25.Mrs.ரூபவல்யா | - நாசரேத் |
| 26.Mrs.அந்தோணியம்மாள்- கலுங்குவிளை | |
| 27.Mrs.மேரிநிர்மலா | - மதுரை |
| 28.Mrs.ஃபுளோராசுந்தர் | - மதுரை |
| 29.Mrs.தேவதாதேவபிரியம் | - சென்னை |
| 30.M.ராமசந்திரன் | - ஒட்டநத்தம் |
| 31.Sis.கஸ்தூரி | - ஒட்டநத்தம் |
| 32.K.ராணி | - தூத்துக்குடி |
| 33.K. சாந்தி | - வாடிப்பட்டி |
| 34.Mrs.ஜெயமணிஜெயபாண்டியன் | - கடலூர் |
| 35.Mrs.ஹெத்சி செல்வின் | - சென்னை |
| 36.K.S.மாணிக்கவாசகம் | - திருச்சி |
| 37.E.அதிசயம் | - பனைகுடி |

**வேத அறிவுப்போட்டி**
**எண் 213 ல் வெற்றிபெற்றவர்கள்**

| | |
|---|---|
| 1.Mrs.வசந்தா ரபீந்திரன் | - தூத்துக்குடி |
| 2.K.ராணி | - தூத்துக்குடி |
| 3.R.ஞானசிரோன்மணி-ஊர்மெச்சிகுளம் | |
| 4.J.ஆலிவ் | - கோவை |
| 5.Mrs.ரத்னாபாய்பிரசாத் | - மதுரை |
| 6.Tmt.மரகதம் திரவியம் | - கோம்பை |
| 7.Mrs.மேரிநிர்மலா | - மதுரை |
| 8.Mrs.ஃபுளோராசுந்தர் | - மதுரை |
| 9.A.டேவிட்ஜெயச்சந்திரன் | - மதுரை |
| 10.B.ஞானதீபம் ஜெபராஜ்- இடையான்குடி | |
| 11.Mrs.ஜெபசீலிஜெயக்கொடி | - திருச்சி |
| 12.Mrs.கிறிஸ்டோபல் | - கோவை |
| 13.J.ரேச்சல்தமிழரசி | - பசுமலை |
| 14.R.அந்தோணியம்மாள்- கலுங்குவிளை | |
| 15.Mrs.ஜாய்மேத்யு | - வி.கே.புரம் |
| 16.S.தங்கம் | - கன்னியாகுமரி |
| 17.Mrs.பாலின்டேனியேல்- | ? |
| 18.Mrs.பாலின்மார்ட்டின் | - காரைக்குடி |
| 19.J.செல்வராஜ் | - தூத்துக்குடி |
| 20.Mrs.ஜெபாநியூட்டன் | - திருநெல்வேலி |
| 21.Mrs.ஹெத்சி செல்வின் | - சென்னை |
| 22.Mrs.ருக்மணிஜெயசீலன் | - தேனி |
| 23.S.லதா | - தேனி |
| 24.S.A.சாமுவேல் | - மரவபாளையம் |
| 25.Mrs.சாந்தாபழனி | - தருமபுரி |
| 26.Miss.சாந்தாதேவி | - தேனி |
| 27.E.ஜாய்ஸ்ஹெலன்புனிதா | - சென்னை |
| 28.Mrs.அல்லிராணிகாட்வின் | - சென்னை |
| 29.Mrs.ஞானம்பிலிப் | - கோவை |
| 30.Mrs.இளவரசி ஜோபிதா | - கோவை |
| 31.Mrs.நவரத்தினஞானராஜ் | - நாசரேத் |
| 32.Mrs.ரூபவல்யா | - நாசரேத் |
| 33.R.ஜெபக்கனி | - கூமாபட்டி |
| 34.S.பிரமிளா ரேவதி | - கோவை |
| 35.G.பூங்கோதை | - கோபி |
| 36.Mrs.ரூத்ஜெயராணி | - கோவை |
| 37.G.நிர்மலா வின்செண்ட் | - புங்கமுத்தூர் |



என்று எண்ணுகிறார்கள் அது தவறு, நம்முடைய பாவநோயை தீர்த்தார் என்றே சொல்லவேண்டும். நோயைப் பார்க்கிலும் பாவம் கொடிதானது. நோயை குணப்படுத்திவிடலாம். ஆனால் பாவத்தை போக்கும் மருந்து இயேசுவின் இரத்தம் மட்டுமே அதை நியாயப்பிரமாணம் செய்யக்கூடாதிருந்தபடியால் தம்முடைய ஒரேபேறான குமாரனையே அனுப்பினார் எனக் காண்கிறோம். தேவன் நம்மீது வைத்த அன்பை இங்கே நாம் புரிந்துகொள்கிறோம். அவர் முதலாவது தம்முடைய குமாரனையே கொடுத்து அன்புகூர்ந்தார். பின்பு நாம் அவரில் அன்புகூருகிறோம். ஒருவராலும் நம்மை பாவத்திலிருந்து மீட்கமுடியாது. ஆனால் ஆண்டவர் சிலுவையில் சிந்தின இரத்தம் நம்மை பாவமறகழுவுகிறது. இந்த இரத்தத்தை சிந்தி நம்மை பாவத்திலிருந்து மீட்ட அவரை நோக்கிப்பார்த்து அவருடைய அடிச்சுவடுகளை நாம் அநுதினமும் பின்பற்றவேண்டியது நம்முடைய கடமையல்லவா? இப்படிப்பட்ட உன்னதமானவர் நமக்கு மாதிரியாக கொடுக்கப்பட்டிருக்கும்போது நாம் நம்மைப்போல உள்ள மனிதர்களை ஏன் மாதிரியாக கொள்ளவேண்டும். நம்மைபோல மாம்சத்தில் உள்ளவர்களை நோக்காமல், இயேசுவை நோக்கிப்பாருங்கள்.

அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவில்லை என காண்கிறோம். இன்றைக்கு மதவட்டாரத்தில் இருக்கிற முன்மாதிரிகள் ஜனங்களை வஞ்சிக்கிறவர்களாக இருக்கிறார்கள். அதைச் செய்கிறோம், இதைச் செய்கிறோம் என்று சொல்லி தங்களுக்கு வேண்டியவைகளை பூர்த்தியாக சம்பாதித்துக்கொள்ளுகிறார்கள். நம் ஆண்டவரோ தலைசாய்க்க இடமில்லாதவராயிருந்தார். அப்படிப்பட்டவரை அப்பொழுதிருந்த பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் அவரைக்குற்றங்கண்டுபிடிக்கும்படியாக வகைதேடினார்கள். "அவர்கள் சமயம்பார்த்து, தேசாதிபதியின் ஆளுகைக்கும் அதிகாரத்துக்கும் அவரை ஒப்புக்கொடுக்கும்படி அவருடைய பேச்சிலே குற்றங்கண்டுபிடிக்கலாமென்று, தங்களை உண்மையுள்ளவர்களாய்க் காண்பிக்கிற வேவுகாரரை அவரிடத்தில் அனுப்பினார்கள். அவர்கள் வந்து போதகரே, நீர் நிதானமாய்ப் பேசி உபதேசிக்கிறீர்ரென்றும், முகதாட்சணியமில்லாமல் தேவனுடைய மார்க்கத்தைச் சத்தியமாய்ப் போதிக்கிறீரென்றும் அறிந்திருக்கிறோம். இராயனுக்கு வரி கொடுக்கிறது நியாயமோ அல்லவோ, எங்களுக்குச் சொல்லும் என்று கேட்டார்கள்...அதற்கு அவர் அப்படியானால், இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதை தேவனுக்கும் செலுத்துங்கள் என்றார்" (லூக்.20:20-25). அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படுமா என்று எண்ணி அவரைக்குற்றப்படுத்தினவர்கள் இந்த வசனத்தைக்கேட்டவுடன் ஆச்சரியப்பட்டுப்போய்விட்டார்கள். ஆம், அன்பான சகோதரனே, சகோதரியே அவர் ஒருவரையும் வஞ்சிக்கவில்லை. அவர் ஒருவரையும் வஞ்சிக்கவேண்டிய அவசியமுமில்லை. ஏனென்றால் அவரால் நாம் உண்டாக்கப்பட்டவர்களாயிருக்கிறோம். ஒரு தகப்பன் தன் பிள்ளையை வஞ்சிப்பானா? அவர் நம்முடைய நன்மைகளை நாடுகிறவர். நமக்கு வேண்டிய

சகலத்தையும் உண்டாக்கிவைத்திருக்கிறார். அவரைப் பின்பற்றியவர்களுடைய கண்ணீரை துடைத்தார். அவர்கள் வேண்டிக்கொள்ளும்போது இன்றுபோய் நாளை வா என்று ஒருவரையும் அவர் சொல்லாமல், அந்த நிமிடமே அவர்களுடைய பிரச்சனைகளை தீர்த்துவைத்தார். உலகத்தில் எந்த மனிதனாலும், எந்த அரசியல் வாதிகளாலும், எந்த அரசாங்கத்தாலும், எந்த ராஜாக்களாலும் தீர்த்துவைக்க முடியாத பிரச்சனைகளை அவர் தம்முடைய வல்லமையினால் தீர்த்துவைத்துவைத்தார். இப்படிப்பட்ட அற்புதங்களை உலகமுண்டானது முதல் கேள்விப்படவில்லையே என்று ஜனங்கள் பேசிக்கொண்டார்கள். அந்த அளவு அற்புதங்களை ஜனங்கள் மத்தியில் செய்து தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றினார். அப்படிப்பட்ட உன்னதமான கர்த்தரை நம்முடைய பிதாவாகிய தேவன் நம்மெல்லாருக்கும் மாதிரியாக கொடுத்திருக்கிறார். அவரை பின்தொடர்ந்து இம்மையிலும் மறுமையிலும் ஆசீர்வதிக்கப்படுங்கள்.

மேலும், "அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச்செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்" (1பேது.2:23). இன்றைக்கு இருக்கிற உலக கடவுள்கள் பயமுறுத்துகிறதாக இருக்கிறது. அவைகளை பின்பற்றுகிறவர்களும், அவைகளை நம்புகிறவர்களும் அது கையை வாங்கிடும், காலைவாங்கிடும், கோபக்காரசாமி என்று சொல்லுகிறார்கள். ஆனால் உலகத்தை இரட்சிக்கும்படியாக வந்த ஆண்டவர் இயேசு ஒருவரையும் பயமுறுத்துகிறவராய் வராமல் சாதுவானவராயிருந்தார். அவரை அத்தனை பாடுகளுக்கு உட்படுத்தியும் அவர் வாய்திறவா ஆட்டைப்போல இருந்தார். ஆட்டுக்குட்டியை கசாப்புக் கடைக்காரர் கழுத்தை அறுக்கும்படியாக கொண்டுபோகிறார். அவைகள் கத்துவதில்லை, அவர்கள் தன் கழுத்தை அறுக்கப்போகிறார்கள் என்பதை அறியாது அவர்கள் வைத்திருக்கிற கத்தியை சில ஆடுகள் ஏதோ சாப்பிடக்கூடியதென்று அவைகளை முகர்ந்து பார்க்கும் அந்த அளவு அது அறியாமல், சத்தமில்லாமல்போகிறது, அதைப்போல நம் ஆண்டவர் அவரை சிலுவையில் அறைய கொண்டு சென்றபோது வாய்திறவாதிருந்தார். "உன்னை நீயே இரட்சித்துக்கொள்; சிலுவையிலிருந்திறங்கிவா என்று அவரைத் தூஷித்தார்கள். அப்படியே பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் தங்களுக்குள்ளே பரியாசம்பண்ணி; மற்றவர்களை இரட்சித்தான் தன்னைத்தான் இரட்சித்துக்கொள்ளத்திராணியில்லை" என்று அவரை பரியாசம்பண்ணினார்கள் (மாற்.15:30,31). இத்தனை பரியாசங்களுக்கு மத்தியில் அவர் பதில் பேசாமல் நியாயமாய் தீர்ப்புசெய்கிறவருக்கு தம்மை ஒப்புவித்தார். இந்த இடத்தில் நீங்களாக இருந்திருந்தால் என்ன செய்திருப்பீர்கள்? ஒன்று சபித்திருப்பீர்கள், அல்லது அவர்களை கால் கைகள் விளங்காதவர்களாக போகட்டும் என்று சொல்லியிருப்பீர்கள். ஆண்டவருக்கு எல்லா வல்லமைகளும் இருந்தும் அவர் நன்மை செய்கிறவராயும், பிதாவின் சித்தம் செய்கிறவராயும் இருந்தபடியால் அவர்களை மன்னிக்கும்படியாக சிலுவையில் தேவனை நோக்கி ஜெபித்தார். இப்படி உலகத்தில் உள்ள எந்த ஒரு நபராவது இருக்கக்கூடுமா? இத்தனை பாடுகளையும்



பங்கு பெற்றவர்களுக்குள்ளே ரோ.8:2-ன்படி கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணத்தினாலே பாவ மரண பிரமாணத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டவர்களாகிய உங்களுக்குள்ளே (2கொரி.5:17) புது சிருஷ்டியின் அனுபவத்தை பெற்ற உங்களுக்குள்ளே வாசமாயிருப்பதாக.

**3. சகல ஞானத்தோடும் (சகல தேவ பயத்தோடும்):** யோபு28:28 ஆண்டவருக்குப் பயப்படுவதே ஞானம் ( நீதி.1:7). கர்த்தருக்குப் பயப்படுவதே ஞானம். யோசேப்பு, (ஆதி.39:9) தேவனுக்கு பயந்து ஞானத்தினால் நிறைந்து தேவனுக்கு விரோதமாக பாவம் செய்வது எப்படி? கூடாதே என்று சகல ஞானத்தோடும் பாவத்திற்கு விலகினார். இப்படி அந்நிய தேசத்திலிருந்த போதும், அடிமையாயிருந்தபோதும், சிறையிலிருந்த போதும், (சங்.105:18) கால்கள் விலங்கிட்டு ஒடுக்கி பிராணன் இரும்பில் அடைபட்டபோதும், எகிப்திற்கு அதிபதியானபோதும் தேவனுக்குப் பயந்து சகல ஞானத்தோடும் ஆதி.49:22-ல் சொல்லப்பட்டபடி கனி தரும் செடியாக காணப்பட்டார். யோபு.1:1 ல் தேவனுக்கு பயந்து பொல்லாப்புக்கு விலகி சகல ஞானத்தோடு சகல விதத்திலும் சோதிக்கப்பட்டபோதும் யோபு19:13-27 ல் அவரை நானே பார்ப்பேன் என்று (யோபு 1:22) இவையெல்லாவற்றிலும் பாவம் செய்யாமல் பரிசுத்தமாக தன்னைக் காத்துக்கொண்டார்.

**பவுல்:** (2தீமோ.4:7) நல்ல போராட்டம் போராடி விசுவாசத்தைக் காத்துக்கொண்டு நீதியின் கிரீடம் தரிக்கப்பட்டார். 2கொரி.11:23-28. அநேக பாடுகள் மத்தியிலும் (பிலிப்.3:7-14) **கிறிஸ்துவின் வசனம்** சகல ஞானத்தோடும் வாசமாயிருந்ததினால் ஜெய ஜீவியம் பெற்று தன்னைக் காத்துக்கொண்டார்.

**ஸ்தேவான்:** (அப்.7:55-60) கிறிஸ்துவின் வசனம் சகல ஞானத்தோடும் பூரணமாக வாசமாயிருந்ததால் விசுவாசத்திலும், வல்லமையிலும் பரிசுத்த ஆவியின்படி அப்.6:5,8, தன் ஆவியை கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவிடம் ஒப்படைத்தார்.

**4. பரிபூரணமாக வாசமாயிருப்பதாக:** நமக்குள் 100 சதவீதம் தேவ வசனம் வாசமாயிருக்க வேண்டும். ஒரு சதவிகிதம் குறைந்தாலும் பாவம் குடிகொள்ளும். மாற்.4:18, உலகக் கவலை ஐசுவரிய மயக்கம், மற்ற இச்சைகள் குடி புகுந்து தேவ வசனம் பூரணமாக வாசமாயிராதபடி பாவம் குடி கொள்ளும். இதைத்தான் சங்.1:2 கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான் என்று தன் அனுபவத்தை சொல்லி 3-ம் வசனத்தில் ஆசீர்வாதத்தை கூறுகிறார். தேவ வசனம் வாசமாயிராவிட்டால் மாற்.7:20-23 ல் பாவம் வாசமாயிருந்து மனுஷனை தீட்டுப்படுத்தும். சங்.19:7-10 தேவ வசனம் ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறது, ஞானியாக்குகிறது, சந்தோஷிப்பிக்கிறது, கண்களைத் தெளிவிக்கிறது, தெளிதேனிலும் மதுரமாயிருக்கிறது என்கிறார். இதையே எரே.15:16 ல் தேவ வசனம் கிடைத்தவுடனே உட்கொண்டேன் என்கிறார். அப்போது இருதயத்திற்கு மகிழ்ச்சியும், சந்தோஷமுமாயிருக்கிறது என்கிறார்.

அப்போஸ்தலனாகிய பவுலும் இதே சிந்தையோடு கொலோசெயர் பட்டணத்திலுள்ள கிறிஸ்துவுக்குள் பரிசுத்தவான்களும் விசுவாசிகளுமாயிருக்கிற சகோதரர்களுக்கு ஆலோசனையாக நிருபம் எழுதியிருக்கிறார். வாசிக்கிற உங்களுக்குள்ளும் கிறிஸ்துவின் வசனம் சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருக்க வேண்டுமென இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே பிதாவாகிய தேவனை நோக்கி வேண்டுகிறோம். ஆமென்.

# தேவ சமாதானம்

The Peace of God

R.Volcano Philip




தேவ சமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது; இதற்கென்றே நீங்கள் ஒரே சரீரமாக அழைக்கப்பட்டீர்கள்; நன்றியறிதலுள்ளவர்களாயுமிருங்கள். கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும், பரிபூரணமாக வாசமாயிருப்பதாக.

நாம் நம்முடைய எல்லா நிகழ்ச்சிகளிலும் எடுத்து உபயோகிக்கிற இந்த வசனம் நம்முடைய கிறிஸ்தவ வாழக்கைக்கு மிகவும் முக்கியமாக இருக்கிறது.

இன்றைக்கு அநேகருடைய வாழ்க்கையில் துன்பம், துக்கம், கலக்கம், குடும்பத்தில் அமைதி இல்லை. சண்டை, பாவம், பரிசுத்த வாழ்க்கை இல்லை காரணம் இந்த வசனம் உங்களுக்குள்ளே வாசமாயில்லை.

கொலோசெய நிருபம் உங்களுக்கு ஏற்கனவே அறிமுகமானதாக தோன்றினால் ஆச்சரியப்படாதீர்கள். அப்.பவுலின் நிருபங்கள் ஓர் ஒழுங்கு முறையைப் பின்பற்றுகிறது. வாழ்த்துக் கூறுதல், ஜெபம், சில கோட்பாடுகள் பிறகு கிறிஸ்துவர்கள் எப்படி நடைமுறையில் வாழ்வது என்பதைப் பற்றியதாக இருக்கிறது.

கொலோசெய நிருபத்தில் உள்ள பல வசனங்கட்கு இணையான வசனத்தை பிலிப்பியர் நிருபத்தில் எழுதி இருக்கிறார். கொலோசெய நிருபம் நமக்கு நன்றாக அறிமுகமான நிருபமாக தோன்றுகிறது. ஏனெனில் எபேசியரிலுள்ள 155 வசனங்களில் 78 வசனங்கள் ஏதேனும் ஒரு வடிவில் கொலோசெய நிருபத்தில் காணப்படுகிறது. இந்த நிருபம் 4 அதிகாரங்களைக் கொண்டது. (கி.பி. 64-ல் ஆதாமின் காலத்திலிருந்து -4068 ஆம் ஆண்டு) அப்.பவுலினால் கிறிஸ்துவுக்குள் பரிசுத்தவான்களும், விசுவாசிகளுமாயிருக்கிற சகோதரர்களுக்கு எழுதப்பட்டது.

**1. கிறிஸ்துவின் வசனம்: பிதாவின் வசனம்;** நீங்கள் கேட்கிற வசனம் என்னுடையதாயிராமல் என்னை அனுப்பின பிதாவினுடையதாயிருக்கிறது (யோவா.14:24). பரிசுத்த ஆவியானவர் யோவா.16:13 சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். யோவா.16:14-ல் **அவர் என்னுடையதில்** எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார். இயேசு கிறிஸ்துவும், பரிசுத்த ஆவியானவரும் பிதாவின் வார்த்தையையே சொல்லுகிறார்கள். தேவ வசனம் (2தீமோ.3:16,17) தேவ மனுஷன் தேறினவனாக மாறுவதற்காக அருளப்பட்டிருக்கிறது. தேறினவனாக என்று வாசிக்கும் போது எபே.4:11-ன்படி கிறிஸ்துவினுடைய நிறைவான (பரிசுத்த) வளர்ச்சியின் அளவுக்கு தக்க பூரண (பரிசுத்தம்) புருஷராக்குகிறது. குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாக்குகிறது (யோவா.8:29).

**2. உங்களுக்குள்ளே:** கொலோ.1:2-ன்படி கிறிஸ்துவுக்குள் பரிசுத்தவான்களும் விசுவாசிகளுமாயிருக்கிற சகோதரருக்குள்ளே, 1கொரி.1:2 பரிசுத்தமாக்கப்பட்ட பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களுக்குள்ளே, ரோ.6;5 இயேசுவின் மரணத்தின் சாயலிலும் அவருடைய உயிர்த்தெழுதலிலும்



நம்மை இரட்சிக்கும்படியாக அநுபவித்தார். அவரை நோக்கிப்பாருங்கள். அவரை பின்தொடருங்கள். அவருடைய வசனங்களை ஒவ்வொருநாளும் வாசியுங்கள். மற்றவர்களுக்கும் அவருடைய அன்பை எடுத்துச் சொல்லுங்கள்.

**கர்த்தருடைய ஊழியக்காரன் எப்படியிருக்கவேண்டும்?**

"மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு ஊழியஞ்செய்யாமல், கிறிஸ்துவின் ஊழியக்காரராக, மனப்பூர்வமாய்த் தேவனுடைய சித்தத்தின்படி செய்யுங்கள்" (எபே.6:6). ஊழியம் என்ற போர்வையில் கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்துக்கொண்டு ஊழியம் செய்கிற அநேகரை நாம் காண்கிறோம். இவர்கள் பெரும்பாலும் மனிதர்களை பிரியப்படுத்தவே ஊழியம் செய்கிறார்கள். ஊழியத்திற்கு அழைத்த தேவனுக்கு ஊழியம் செய்யாமல் ஒரு வியாபார நோக்கில் ஊழியம் நடந்துகொண்டிருக்கிறது. வியாபாரத்தையும், ஊழியத்தையும் ஒப்பிட முடியாது. பணம் முதலீடு செய்தால் ஒரு வருடத்தில் 10 மடங்கு அல்லது அதற்கு அதிகமாகவும்கூட சம்பாதித்துவிடலாம். ஊழியத்தை அந்த விதமாக செய்ய முடியாது. தேவனுடைய அநுகிரகம் வேண்டும். அவருடைய வழிநடத்துதல் வேண்டும், அவருடைய பிரசன்னம் வேண்டும். வேலைசெய்யக்கூடியவர்கள் அதற்கு இசைவாய் ஒப்புக்கொடுத்திருக்கவேண்டும். இப்படி பல காரியங்கள் இருக்கிறது. ஆகையால் கிறிஸ்துவை பிரியப்படுத்தும் படியாக ஊழியத்தை செய்ய நாடுங்கள். அவருக்கு பிடிக்காதவற்றை நம்மை விட்டு முதலாவது அகற்றிபோட நாம் முன்வரவேண்டும். ஆண்டவர் ஊழியம் கொள்ளும்படி வராமல் ஊழியம் செய்யவும் வந்து, அநேகரை மீட்கும்படியாக தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார். அதைப்போல சிந்தையுள்ளவர்களாக ஊழியம் செய்யநாடுங்கள். முதலாவது, உலகமெங்கும் கர்த்தரே சீஷர்களை அனுப்பினார். அவர்கள் உலகமெங்கும் சென்று சுவிசேஷத்தை அறிவித்தனர். அதைப்போல சுவிசேஷம் அறிவிக்க நாடுங்கள்.

ஜெபியுங்கள்

- பெண்களின் பாதுகாப்பிற்காக...
- திக்கற்ற பிள்ளைகளுக்காக...
- சிறை கைதிகளுக்காக...



## வாரத்தின் முதல் நாளின் விசேஷம்

-Murugan

| | |
|---|---|
| 1. இயேசுகிறிஸ்து முதல் முதல் மகதலேனாவுக்கு தரிசனமானார் | - மாற்.16:9 |
| 2. இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் | - லூக்.24:6 |
| 3. இயேசுவின் சரீரமாகிய அப்பம் பிட்டது | - லூக்.24:30 |
| 4. ஆதி அப்போஸ்தலர்களும் சீஷர்களும் சபையாககூடினார்கள் | - அப்.20:7 |

**இலங்கை ஆசியசேவை SW 25 மேற்றும் 41 மீட்டரில் ஒவ்வொரு சனிக்கிழமையும் மாலை 5.15 முதல் 5.30 வரை ஒலிபரப்பாகும் The Word of Christ ரேடியோ நிகழ்ச்சியை வானொலியிலும் மற்றும் உலகளவில் www.slbc.lk இணையதளத்திலும் கேட்டு பயன்பெறுங்கள்.**

# பழைய மனிதனின் பாவம் களையப்படுதல்

## Putting Off The Old Man of Sin

*-J.C.Choate*



-சென்ற மாத தொடர்...

மீண்டும் இயேசு; "பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கவேண்டாம்; இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும்; இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள்; பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள்; அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை. உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்" என்றார் (மத்.6:19-21). இன்னொரு சம்பவத்தில் இயேசு, "திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்" என்றார் (யோவா.10:10).

ஒருசமயம் இயேசு எருசலேமில் இருக்கையில், "இயேசு தேவாலயத்தில் பிரவேசித்து, ஆலயத்திலே விற்றவர்களும் கொள்ளுகிறவர்களுமாகிய யாவரையும் வெளியே துரத்தி, காசுக்காரருடைய பலகைகளையும் புறா விற்கிறவர்களின் ஆசனங்களையும் கவிழ்த்து; என்னுடைய வீடு ஜெபவீடு என்னப்படும் என்று எழுதியிருக்கிறது; நீங்களோ அதைக் கள்ளர் குகையாக்கினீர்கள் என்றார்" (மத்.21:12,13). இது இன்றுள்ள பல மார்க்க ஸ்தலங்களை நமக்கு நினைப்பூட்டுகிறது. அவைகளெல்லாம் தேவனுடைய ஆலயங்கள் அல்ல அல்லது கிறிஸ்துவை அடையாளப்படுத்துகின்றவைகளும் அல்ல. ஆனால் மார்க்க ஸ்தலத்தைப் போலிருந்தாலும் அவைகள் கள்ளர் குகைகள். அங்குள்ள எல்லாவகையான மக்களும் அங்கு வருகின்ற ஏழை மக்களிடமிருந்து இலாபகரமானவற்றை எடுத்துக் கொண்டு வருகின்றார்கள். அவர்கள் எல்லாவித பொருட்களையும் விற்று அதிகப் படியான கிரயத்தை எடுத்து அவர்களை ஏமாற்றி எவ்வளவு கூடுமோ அந்த அளவிற்கு அவர்களின் இலாபகரமானவற்றை எடுத்துக் கொள்கின்றனர். இப்படிப்பட்ட பழக்கவழக்கங்கள் வெட்கத்திற்குரியது. ஆனால் இயேசு எருசலேமிலிருந்த தேவாலயத்திலும் இப்படிப்பட்ட காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்ததைக் கண்டு, இது மெய்யாகவே பரலோகத்தின் தேவனை அடையாளப்படுத்தவில்லை என இப்படிப்பட்ட பழக்கவழக்கங்களைக் கடிந்துகொண்டார்.

இயேசு பிதாவினிடத்திற்குச் செல்ல ஒரே வழி என போதித்தார் (யோவா.14:6), இருந்தபோதிலும் மனிதன் உறுதியாக பரலோகத்திற்குச் செல்ல பல வழிகள் உண்டென போதிக்கின்றனர். இயேசு யோவா.10:1-ல் இதே கொள்கையை





# மகா அன்பளிப்பு - Greatest Gift

*-Jerry*

- சென்ற மாத இதழின் தொடர்ச்சி

5. இந்தக் கடமை நம்மால் எவ்வளவு கொடுக்க முடியும் என்ற திராணியைச் சார்ந்ததல்ல.

ஒரு வாரத்தில் 50000 ம் டாலர் சம்பாதிக்கும் பெரிய வியாபாரிக்கு கொடுக்கும்படியான கடமை எவ்வளவிருக்கிறதோ அவ்வளவு ஒரு வாரத்திற்கு 500 டாலர் சம்பாதிப்பவருக்குமுள்ளது.

எனக்குத் தேவைப்படுவதுபோல் என்னுடைய பணம் தேவனுக்குத் தேவையில்லை. அது உண்மை நாம் கொடுக்கும் காணிக்கையில்லாமல் தேவனால் ஜீவிக்க முடியாது என்பதால் உண்மையுள்ளவர்களாய் நாம் கொடுக்காவிட்டால் நாம் செழிக்க முடியாது என்பதால் நாம் கொடுக்க வேண்டும்.

கொடுப்பதில் தவறுவது நாம் அன்பில் குறையுள்ளவர்களாக இருக்கிறோம் என்பதைக் குறிக்கும். எப்போதுமே வாங்குகிறவர்கள் சுயநலமுள்ளவர்களாக இருப்பார்கள்.

தேவனுக்கு எந்தப் பொருளும் சிறியதோ அல்லது அற்பமானதோ அல்ல.

1. அடிக்கடி நிற்கும் மனப்பான்மை என்னவென்றால் நான் செய்யக்கூடியது அல்லது கொடுக்கக் கூடியது எவ்வளவு சிறியதாயிருந்தாலும் அதைப் பற்றி கவலையில்லை. யூதப்பணத்திலேயே மிகவும் அற்பமான காசு ஒரு பைசாவுக்கும் குறைவானது.

2. அந்த ஏழை விதவைக்கு இந்தவிதமான மனப்பான்மை இருந்திருக்கலாம். அது பெருந்தவறு

3. அந்த விதமான மனப்பான்மை கொடுப்பதற்கான காரணத்தை விட்டு விடும் மிகப்பெரிய வேலையை செய்து முடிக்கும்படியாக நாம் கொடுப்பதில்லை. அது நாம் கொடுக்கும் ஈவின் அளவைப் பொறுத்து செயல்படுவதில்லை.

நானே ஒரு பெரிய வேலையைச் செய்யவேண்டுமென்று காத்திருந்தால் ஒருபோதும் நாம் கொடுக்கவோ எதுவும் செய்யவோ முடியாது.

**எடுத்துக்காட்டு** நளத தைலத்தினால் இயேசுவானவரின் தலையை அபிஷேகம் செய்தவள் (மாற்.14:8,9). சிலருக்கு அது பொருத்தமில்லாத சிறிய செயல் ஆனால் இயேசுவானவரின் நன்மதிப்பைப் பெற்ற ஒன்று.

4. கொடுக்கின்ற செயலில் ஏழைகள் பணக்காரர்களோடு கூட சமமாக இருக்கிறார்கள். வாழ்க்கையில் பலவற்றில் பணக்காரர்களுக்கு சாதகமான நிலையுண்டு. யாவரும் ஒரே மாதிரியாகக் கொடுக்க வேண்டுமென்று தேவன் எதிர்பார்ப்பதில்லை.

5. பெரிய காரியங்களைச் செய்து முடிக்க சிறியவைகளைத் தேவன் பயன்படுத்தக்கூடும்.

ஐந்து அப்பம் இரண்டு மீன்களைக் கொண்டு 5000 பேருக்கு உணவளித்தார்.

சில கவண்கற்களைக் கொண்டு தாவீது பெரிய அரக்கனைக் கொன்றார்.

நான் ஒரே ஒருவன், இருப்பினும் நான் ஒருவன் எல்லாவற்றையும் என்னால் செய்ய முடியாது. ஆனால் சிலவற்றை என்னால் செய்யமுடியும். என்னால் எல்லாவற்றையும் செய்யமுடியாதென்பதால் நான் செய்யக்கூடிய சிலவற்றைச் செய்யத் தவறமாட்டேன்.

கொடுப்பதிலே தேவன் நமது நோக்கத்தைப் பார்க்கிறார்.

1. நம்முடைய நோக்கங்களை அவர் கவனிக்கிறார்.

அவனவன் வினமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக் கடவன். உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார் (2கொரி.9:7).

1. மனப்பூர்வமாய் அல்லாமல் முறுமுறுப்புகளோடு கொடுக்கப்படும் கொடைகள் தன்னை பிரபலப்படுத்தவோ அல்லது சுய மதிப்பிற்காகவோ கொடுக்கப்படும் கொடைகள். அதன் மதிப்பை இழந்துவிடும்.

2. ஒருவர் நேசிக்கிறபடி கொடுக்கிறார். மக்கெதோனியா மக்கள் உதாரத்துவமாகக் கொடுத்தார்கள். காரணம் அவர்கள் தங்களைத் தாமே கர்த்தருக்குக் கொடுத்தனர் (2கொரி.8:5).

**-தொடரும்**

தேவன் தம்மைக் குறித்தும் தம் குமாரனாகிய இயேசுவைக் குறித்தும் நாம் நம் நண்பர்களிடத்தில் பேச வேண்டுமென விரும்புகிறார். ஆனால் இதைச் செய்ய நாம் நம்மை எவ்வாறு ஆயத்தப்படுத்துகிறோம்? அவருடைய வார்த்தையைப் படிப்பது மூலமாகவே. பேதுரு, "கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம் பண்ணுங்கள்; உங்களிலிருக்கிற நம்பிக்கையைக் குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவுசொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்" (1பேது.3:15) என்று எழுதியுள்ளார். நமது நண்பர்கள் கிறிஸ்தவர்களாக மாற நாம் விரும்பினால் - அவர்களை கிறிஸ்தவர்களாக மாற்றக்கூடிய தேவனுடைய வார்த்தைகளை அவர்களுக்கு அறிவிக்க வேண்டியவர்களாக இருக்கவேண்டும் - நாம் இதைக் கண்டிப்பாக செய்யவேண்டும். நாம் நம்முடைய நண்பர்களை மாற்றமடையச் செய்வதில்லை; தேவனுடைய வார்த்தையே மனமாற்றமடையச் செய்கிறது. தேவவார்த்தை ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுடையது என்கிறார் (யாக்.1:21). பேதுரு "அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே" கிறிஸ்தவர்கள் மறுபடியும் ஜெநிபிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றார் (1பேதுரு1:23) நாம் தேவ வார்த்தைகளைக் குறித்த ஆயத்தமுள்ளவர்களாயிருக்க வேண்டியது அவசியம் அப்போதுதான் நம் நண்பர்கள் தேவனைக்குறித்து பேசவிரும்புகிற போது அவர்களுக்கு ஏற்ற நல்ல தகவல்களைக் கொடுக்க ஆயத்தமுள்ளவர்களாக இருப்போம்.

### நடப்புச்செய்திகள்

❒ தமிழகத்தை சேர்ந்த கிறிஸ்தவர்கள், ஜெருசலேம் புனித பயணம் மேற்கொள்ள தமிழக அரசு சார்பில், தலா 20 ஆயிரம் நிதியுதவி வழங்கப்படுகிறது.

❒ துருக்கி அதிபர் தேர்தலில் வெற்றி பெற்றுள்ள எர்டோகன், அந்நாட்டு அதிபராக மீண்டும் பொறுப்பேற்றார்.

❒ இளம் வயதில் 'கிராண்ட் மாஸ்டர் அந்தஸ்து பெற்று பிரமிக்க வைத்தார் பிரக்ஞானந்தா என அவரது தந்தை ரமேஷ்பாபு தெரிவித்துள்ளார்.

### தெரிந்துகொள்வோம்

## விசித்திர தூக்கங்கள்!


*-K.R.K.Ravi Asir*



▶ குறும்புத் தனத்திற்கும் பெயர் போன ராக்கூன் என்று ஒரு வகை கீரிப்பிள்ளை போன்ற பிராணி சுவாரஸ்யமாக குறட்டை ஒலியுடன் தூங்கும். அத்துடன் மனிதர் போல இப்பிராணிகள் கனவு காண்கின்றன எனத் தூங்கும் போது இவற்றின் உடல் அசைவைக் கொண்டு விஞ்ஞானிகள் கருத்து வெளியிட்டுள்ளார்கள்.



▶ நாய், பூனை போன்ற விலங்குகள் வாலைச் சுருட்டிக் கொண்டு உடலின் வெப்பத்தைக் காப்பாற்றி தலையை உடலின் உட்பதித்துத் தூங்கும்.



▶ வாத்து தரையில் நின்று கொண்டோ அல்லது தண்ணீரில் நீந்தியவாறோ தூங்கும்



போதித்தார். அவர் சொல்லும்போது ஆட்டுத் தொழுவத்துக்குள் பிரவேசிக்க ஒரே வாசல் அல்லது சபை உள்ளது என்றார். தொடர்ந்து சொல்லுகையில் ஒருவன் வேறுவழியாய் ஏறுகிறவன் கள்ளனும் கொள்ளைக்காரனுமாயிருக்கிறான் என்றார்.

நாம் இயேசு தாமே எவ்வாறு இரண்டு கள்ளர்கள் நடுவே சிலுவையில் அறையப்பட்டார் என்பதைப் பற்றிய விஷயத்தை நன்கு அறிவோம். மெய்யாகவே இயேசுவினிடத்தில் பாவமில்லை, மரிக்கவேண்டியதுமில்லை, ஆனால் அவர் காட்டிக்கொடுக்கப்பட்டார், பொய்யாக குற்றஞ்சாட்டப்பட்டார். பொய்யான நியாய விசாரணை கொடுத்தனர். மேலும் முடிந்தவரை குற்றப்படுத்த வகை தேடினார்கள். அவர் இரண்டு கள்ளர்கள் நடுவில் சிலுவையிலறையப்பட்டார். அந்த கள்ளர்களில் ஒருவன் மிகவும் புத்திசாலி, நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம். இவரோ ஒரு குற்றமும் செய்யவில்லையே என்றான். அந்த புத்தியுள்ள கள்ளன் அவருடைய ராஜ்யத்தில் வரும்போது தன்னை நினைத்தருளும் என்று கர்த்தரிடத்தில் வேண்டிக்கொண்டான். இயேசு அவனை நோக்கி:இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் அல்லது நீதிமான்கள் மரித்த இடத்தில் இருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார். கிறிஸ்துவினால் அவனை அவ்விடத்திலே மன்னிக்க முடிந்தது, அப்படியே அவர் செய்தார். சிலர் இதை எடுத்துக்காட்டாகப் பயன்படுத்தி இன்று ஒருவன் எப்படி இரட்சிக்கப்பட முடியும் என்கின்றனர். ஆனால் நம்முடைய சூழ்நிலை அவனுடைய சூழ்நிலைக்கு ஒத்ததாக இல்லை. அவன் கிறிஸ்து சிலுவையில் மரிப்பதற்கு முன் வாழ்ந்தான், நாமோ கிறிஸ்துவின் மரணத்திற்குப் பின் வாழ்கிறோம். கர்த்தருடைய சித்தமும் மன்னிக்கும் தன்மையும் முத்திரையிடப்பட்டிருந்தது மேலும் கிறிஸ்துவின் சிலுவை மரணத்தில் கட்டப்பட்டிருந்தது. கிறிஸ்து இப்பூமியில் வாழ்கையில் ஒருவனுடைய பாவங்களை அந்த இடத்திலே மன்னிக்க முடிந்தது ஆனால் அவருடைய மரணத்திற்குப் பிறகு நாம் இரட்சிக்கப்பட என்னசெய்ய வேண்டுமென அவர் விரும்புகிறார் என்பதை நாம் கண்டிப்பாக அவருடைய சித்தத்தை அறிந்து கொள்ளவேண்டும். அதன் பின் நாம், "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் (மாற்.16:16) என அறிவுறுத்தப்படுகிறோம். இது எல்லாரும் கைக்கொள்ள வேண்டியது, ஆனபடியினால் ஒருவரும் தவிர்க்க முடியாதது. பேதுரு ஒரு திருடனாகயிருந்து கஷ்டப்படுவது ஒரு வெட்கத்திற்குரிய காரியம் என்றார். நாம் "ஆதலால் உங்களில் ஒருவனும் கொலைபாதகனாயாவது, திருடனாயாவது, பொல்லாங்கு செய்தவனாயாவது, அந்நிய காரியங்களில் தலையிட்டுக்கொண்டவனாயாவது பாடுபடுகிறவனாயிருக்கக்கூடாது" என்று 1பேது.4:15-ல் வாசிக்கிறோம். மீண்டும் பவுல், "எப்படியென்றால், விபசாரம் செய்யாதிருப்பாயாக, கொலை செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக, பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக, இச்சியாதிருப்பாயாக என்கிற இந்தக் கற்பனைகளும், வேறே எந்தக் கற்பனையும், உன்னிடத்தில் நீ அன்பு கூருகிறதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்கிற ஒரே வார்த்தையிலே தொகையாய் அடங்கியிருக்கிறது" (ரோம.13:9).

-தொடரும்...

பெண்கள் பகுதி

# ஞாபகச்சின்னம்

## The Memorial

-Betty



"அவர்கள் போஜனம் பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப்பிட்டு, சீஷர்களுக்குக் கொடுத்து: நீங்கள் வாங்கிப் புசியுங்கள் இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். பின்பு, பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து; நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்; இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது இதுமுதல் இந்தத் திராட்சப்ழரசத்தை நவமானதாய் உங்களோடேகூட என் பிதாவின் ராஜ்யத்திலே நான் பானம்பண்ணும் நாள்வரைக்கும் இதைப் பானம்பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். "அவர்கள் ஸ்தோத்திரப் பாட்டைப்பாடினபின்பு, ஒலிவமலைக்குப் புறப்பட்டுப்போனார்கள்" (மத்.26:26-30).

**முதல் நூற்றாண்டு சபையினுடைய ஞாபகச்சின்னத்தின் நியமம்**

"அன்றியும், சகோதரரே, நான் உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்; நீங்களும் அதை ஏற்றுக்கொண்டு, அதிலே நிலைத்திருக்கிறீர்கள். நான் உங்களுக்குப் பிரசங்கித்தபிரகாரமாய், நீங்கள் அதைக் கைக்கொண்டிருந்தால், அதினாலே நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள்; மற்றப்படி உங்கள் விசுவாசம் விருதாவாயிருக்கும்.

"நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து" (1கொரி.15:1-4).

அநேகமாக இன்று கிறிஸ்துவின் சபைகளில் பல கிறிஸ்தவர்களுக்கு, இயேசுவின் மரணத்தை நினைவுகூருதல் மேஜையைச் சுற்றியுள்ள பல ஆண்களின் கூட்டத்தில் ஆரம்பித்து பாத்திரமானது திரும்பவும் கொடுத்தவர்களிடத்தே முடிவடைகிறது. கிறிஸ்துவின் மரணத்தை நினைவு கூருகையில் ஒருவருடைய சொந்த மனச்சாட்சியை நிதானித்து அறிந்து பங்கு பெருகிறதாயிருக்கிறது.

நினைவுகூருதல் என்பது நல்லது, நானே அதிலிருந்து ஒன்றையும் விலக்கவில்லை, ஆனால் ஆராதனைக்காகவும், கிறிஸ்துவோடுகூடிய நெருக்கமான உறவுக்காகவும் கூடுகையில் நினைவுகூருதலுக்கென ஆயத்தமாவதில் நாம் ஒருவரையெருவர் சுட்டிக்காட்டுவது ஒரு அற்புதமான நிகழ்வில் வருத்தத்துக்குரியதாயிருக்கிறது.

இயேசு மரித்தபோது, விசுவாசிகள் அவருடைய சரீரத்தை சிலுவையிலிருந்து எடுத்தார்கள். விசுவாசிகள் அவருடைய சரீரத்தை சுகந்த வர்க்கங்களுடனே துய்யதான மெல்லிய துப்படியினால் சுற்றி, அவருடைய சரீரத்தை சீலைகளில் சுற்றிக் கட்டி பின்பு விசுவாசிகள் கல்லறையில் வைத்தார்கள். அதன் பின்பு வாரத்தின் முதல்நாள் காலையில் கவலையோடு ஸ்திரீகளும் விசுவாசிகளும் சுகந்தவர்க்கங்களையும் பரிமளதைலங்களையும் அவர் மரணத்தில் நீண்டநாள் இருப்பார் என எதிர்பார்த்து அவருடைய சரீரத்தை ஆயத்தப் பண்ணும்படி சுகந்தவர்க்கங்களையும், பரிமளதைலங்களையும் ஆயத்தம் பண்ணி கல்லறைக்குக் கொண்டுவந்தார்கள்.



# நமது நண்பர்களுக்கு சுவிசேஷம் அறிவித்தல்

## Evangelizing Our Friends

-TVOTI



**சரியான ஆயத்தம் தேவனை அறிய**
**உன் நண்பனுக்கு உதவுகிறது**
**பாடம் -5**

Proper Preparation Helps Your friends To Know God

**(1பேதுரு3:15) "கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம் பண்ணுங்கள்; உங்களிலிருக்கிற நம்பிக்கையைக் குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்"**

**முன்னுரை:**

நீங்கள் எப்போதாவது ஏதோ சிலவற்றைக் குறித்து உங்கள் நண்பருடன் பேசுவது எளிதென்று உணர்ந்திருக்கிறீர்களா? நம்முடைய சுய வசதிக்காக இந்த காரியங்களோடு இசைந்திருப்போம். மற்ற நேரங்களில் நமது சுயபயங்களினிமித்தம் இவ்வாறு காணப்படும். சிலவேளைகளில் இது ஒரு சாதாரண உணர்வின் அறிமுகமாகவும், மேலும் உங்களுடைய நண்பர்கள் எவ்வாறு செயல்பட போகிறார்கள் என்பதை அறியும் பொருட்டும் இருக்கும். வேதாகமத்தைக் குறித்து உங்கள் நண்பர்களுடன் பேசுவது எவ்வளவு கடினமாக இருக்கிறது? சிலவேளைகளில் இது இயலாத ஒன்றாக தோன்றும். உங்கள் நண்பர்கள் சுயமாக நினைவுகள் சூழ்நிலைகளையும் அத்தோடு அவர்கள் மார்க்கத்தைக் குறித்த சுயக்கோட்பாடுகள், நம்பிக்கைகளையும் கொண்டிருப்பார்கள். அவர்களோடு நீ எவ்வாறு சுவிசேஷத்தைக் குறித்து பகிர்ந்து கொள்வாய்? ஒரு உண்மையான நண்பன் பகிர்ந்து கொளுவதற்கான வழிகளை எதிர்நோக்கியிருப்பான். நமக்கு சந்தர்ப்பம் வரும்போது பகிர்ந்து கொள்ள ஆயத்தமாக இருக்கவேண்டும் என்பதே முக்கிய காரியமாகும்.

**வேதாகமம் என்ன சொல்லுகிறது?**

கிறிஸ்தவர்களல்லாத மக்களோடு நண்பர்களாக இருக்க வேண்டுமென தேவன் நம்மிடம் எதிர்பார்க்கிறார். இயேசு பாவிகளின் நண்பர் என்று அழைக்கப்பட்டார் (லூக்.7:34). மேலும் அவர் கிறிஸ்தவரல்லாதவர்களோடும் நாம் நண்பர்களை உருவாக்கவேண்டுமென நமக்குச் சொன்னார் (லூக்.16:9). நண்பர்களை உருவாக்கும்படி நாம் நண்பர்களாக இருக்க வேண்டியது அவசியம் (நீதி.18:24). இதன் பொருள் அவர்கள் நல்லவர்களாக இல்லாத போது நாம் அம்மக்களிடம் அன்புள்ளவர்களாக இருக்கவேண்டும் என்பதாகும். இது மேலும் மற்றவர்களோடு அவர்களது நம்பிக்கைகள் மற்றும் கனவுகளைக் குறித்து பேசவும் கவனிக்கவும் வேண்டுமென பொருள்படுகிறது. யாரோ ஒருவரிடம் நண்பனாயிருப்பதற்கு நீங்கள் அவர்களோடு நேரத்தை கழிக்க வேண்டியது அவசியம். நாம் நல்ல நண்பர்களாக இருப்பது சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ள நம்மை ஆயத்தப்படுத்த உதவும்.

வல்லவர் ஒருவர் எனக்குப்பின் வருகிறார், அவருடைய பாதரட்சைகளின் வாரைக் குனிந்து அவிழ்க்கிறதற்கும் நான் பாத்திரன் அல்ல" (மாற்.1:8). என்று தன்னைத் தாழ்த்தி கர்த்தரை மேன்மைப்படுத்துகிறான். இதைப்போலவே மரியாளும் "வல்லமையுடையவர் மகிமையானவைகளை எனக்குச் செய்தார்; அவருடைய நாமம் பரிசுத்தமுள்ளது…தம்முடைய புயத்தினாலே பராக்கிரமஞ்செய்தார்; இருதய சிந்தையில் அகந்தையுள்ளவர்களைச் சிதறடித்தார் பலவான்களை ஆசனங்களிலிருந்து தள்ளி, தாழ்மையானவர்களை உயர்த்தினார்" (லூக்.1;49-52) என்று மகிமைப்படுத்துகிறாள். ஆம், நாம் ஒன்றுமில்லை மண் என்று நினைவுகூரவேண்டும். கர்த்தர் ஒருவரே பராக்கிரமசாலி என மேன்மைபாராட்டக்கடவோம்.

**அடுத்ததாக ஐசுவரியவான் தன் ஐசுவரியத்தைக் குறித்து மேன்மைபாராட்டவேண்டாம்** எனக் கட்டளையிடுகிறார். ஏனென்றால் ஐசுவரியவானுடைய பொருள் அவனுக்கு அரணான பட்டணம்; அது அவன் எண்ணத்தில் உயர்ந்த மதில்போலிருக்கும்" என்று நீதி.18:11 ல் வாசிக்கிறோம். அநேக ஸ்திரீகள் தங்களுடைய ஐசுவரியத்தைக் குறித்து பெருமையாகப் பேசினதைக் கேட்டிருக்கிறேன். தலைமுறை தலைமுறைக்கும் போதிய சொத்து சுகங்கள் உண்டு. எங்களுக்கு ஒரு கவலையுமில்லை என்பர். இப்போர்பட்டவர்களைப் பார்த்து தான் கர்த்தர் உன் ஐசுவரியத்தைக் குறித்து மேன்மை பாராட்டாதே என்கிறார். உங்கள் எண்ணத்தில் மதிலைப்போலிருக்கிற ஐசுவரியம் ஒருநாளில் அழிநதுபோகும். லூக்கா 12:16-21 ல் ஒரு ஐசுவரியவானைக் குறித்து வாசிக்கலாம். அவன் தன் தானியங்களையும் பொருள்களை சேர்த்துவைக்க தன் களஞ்சியங்களை இடித்து, பெரிதாகக் கட்டுவேன், பின்பு ஆத்துமாவே, உனக்காக அநேக வருஷங்களுக்கு அநேகம் பொருள்கள் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது நீ இளைப்பாறி, புசித்துக் குடித்து, பூரிப்பாயிரு என்று சொன்னான். தேவனோ அவனை நோக்கி: மதிகேடனே, உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக்கொள்ளப்படும் என்றார். இதுதான் ஒவ்வொரு ஐசுவரியவானின் முடிவு. அப்படியிருக்க மேன்மைபாராட்டுவது எப்படி?

அன்பு சகோதரிகளே, கர்த்தருடைய கிருபை பெரியது. அவருடைய கிருபையினாலே பாவத்தின்பிடியிலிருந்து இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். இது தேவனுடைய ஈவு. அவர் நமக்கு நியாயத்தையும் நீதியையும் செய்கிற கர்த்தர் என்பதை அறிந்து உணர்ந்து கொள்ளவேண்டும். இயேசு கிறிஸ்து நமக்கும் தேவனுக்குமிடையே பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து நம்மை புதிய மனுஷியாக சிருஷ்டித்து தேவனோடு ஒப்புரவாக்கியுள்ளார். தூரமாயிருந்த நாம் கிறிஸ்துவின் சிலுவை மரணத்தினால் பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியத்தை அவர் மூலமாய்ப் பெற்றிருக்கிறோம் (எபே.2) ஆகவே இந்தக் கிருபையைக் குறித்தும் அவரது சிலுவையைக் குறித்தும், அவரது மீட்பின் சுவிசேஷத்தைக் குறித்தும் மேன்மைபாராட்டுவோம். நம்மைக் குறித்தல்ல! கர்த்தரைக் குறித்தே மேன்மைபாராட்டுவோமாக!



இது அந்த மரணத்தின் நினைவுகூருதலில், வாரத்தின் முதல் நாள் தோறும் முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் நினைவுகூர்ந்தது போல நாம் அவர் தம்முடைய மரணத்தை ஜெயித்தார் எனகூடிவருகிறோம். "வாரத்தின் முதல் நாளிலே அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்படவேண்டுமென்றிருந்து, அவர்களுடனே சம்பாஷித்து, நடுராத்திரிமட்டும் பிரசங்கித்தான்" (அப்.20:7).

நினைவுகூருதலில் தேவனுடைய குமாரனின் மரணம், அடக்கம், மற்றும் உயிர்த்தெழுதலில் கிறிஸ்தவர்கள் முக்கியமாக கிறிஸ்துவின் சரீரத்திற்கும் இரத்தத்திற்கும் மாதிரியாக வைக்கப்பட்ட புளிப்பில்லா அப்பத்திலும் பழச்சாறிலும் பங்கு கொள்ளும்படி தேவனால் ஏற்படுத்தப்பட்ட பரிசுத்த ஐக்கியத்திற்குரியதே நினைவுகூருதல் ஆகும். ஆனால் "ஆயத்தமாகுகிற" அமெரிக்க ஐக்கிய நாடுகளில் அதிகமாக கிறிஸ்துவின் சபைகளில் கிறிஸ்துவின் மரணத்தை நினைவு கூருகிறார்களா? மெய்யான விருந்துக்கு நிழலாயிருந்த பஸ்கா அப்பத்தைப் போல புதிதான அப்பத்தை அன்புடனும், பயத்துடனும் விசுவாசிகளின் கைகளினால் தயாரிக்கப்படுகிறதா? இல்லை, கவலைக்குரியது, அதிகமான பிராந்திய சபைகளில் புதியதல்லாத உடைந்து போகக்கூடியதை இந்த தியாக நினைவுகூருதலுக்குப் பயன்படுத்துகின்றனர். யூதகுலத்தவர்களால் தயாரிக்கப்பட்ட அப்பமானது "பஸ்காவுக்காக அல்ல" என தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

நான் அற்பமானதை மிகைப்படுத்துவதாக நீங்கள் நினைக்கிறீர்களா? இருக்கலாம். அப்படி இருந்தபோதிலும் இது அற்பமான காரியமல்ல. கர்த்தர் ஆராதனையில் செய்யக்கூடியதாயிருந்த மிகச் சிறிய காரியங்களை பற்றிகூட மிகவும் கண்டிப்புள்ளவராயிருந்தார். யாத்திராகமம்34:25 பஸ்காவிற்குரிய அப்பத்தைக் குறித்து அவர் "எனக்கு இடும் பலியின் இரத்தத்தைப் புளித்தமாவுடன் செலுத்த வேண்டாம்; .." அவர் இன்னும் உபாகமம்16:4-லும்: "ஏழுநாள் அளவும் உன் எல்லைகளிலெங்கும் புளிப்புள்ள அப்பம் உன்னிடத்தில் காணப்படலாகாது…" அவர் கிறிஸ்துவின் ஆளுகையின் கீழ் கண்டிப்பினை குறைத்து இருந்தாலும்கூட, வழக்கமான மனநிலையைக் காட்டிலும் தேவனுடைய குமாரனின் நினைவுகூருதலைப் பயத்தோடும், நிதானத்தோடும் கைக்கொள்வது நியாயமானதில்லை என நினைக்கிறீர்களா?

மேலும் தேவன் நமது கவனக்குறைவை அறிந்திருந்தாலும் கூட, எப்படியோ இதை வெளிப்படுத்தாமல் இருந்துகொண்டு கிறிஸ்துவுக்காக மனக்கிளர்ச்சியின்றி அக்கறையற்றவர்களாக கிறிஸ்தவர்கள் பின்பகுதியில் உட்கார்ந்து கொண்டு இருக்கையில் அவிசுவாசிகளை நம்முடைய நினைவுகூருதலுக்கு மிக இன்றியமையாததாக கிரியைசெய்ய அநுமதிக்கிறோம்.

மரியாள், யோவான்னாள் மற்றும் மகதலேனாமரியாள் ஆராதனைசெய்யும்படி தங்களுடைய கர்த்தரை சிலுவையில் அறைந்து, புறக்கணித்த மக்களால் செய்யப்பட்ட அப்பத்தை வாங்குவதற்கு மார்க்கெட்டுக்குச் சென்றார்கள் என கற்பனை செய்கிறீர்களா?

இல்லை, பதிலாக, நான் பார்க்கிறேன் அவர்களுக்குள் திட்டமிட்டு ஒவ்வொரு வாரம் வாரம் கர்த்தருடைய நாளில் மிகச்சிறந்த மாவினையும் எண்ணெயையும் எடுத்து, மிகச் சிறந்த பழத்தினை எடுத்து மிக அழகாக நினைவுகூருதலுக்கென்று ஆர்வத்துடன் தங்களது சிறப்புரிமையென எண்ணி ஆயத்தம்செய்ய முன் வந்திருப்பார்கள் சந்தேகமின்றி, அனைத்து நேரங்களிலும் அவள் ஆராதனைக்கென்று மிக அவசியமான அடையாளங்களாகிய அப்பம் தயாரிக்க தேவையான பொருட்களை ஆயத்தம் பண்ணுவதிலும், அவள் திருவிருந்தில் நினைவு கூர்ந்தவளாக மிகுந்த அன்புடன் அதையே நினைத்திருந்திருப்பாள்.

அவள் வழிந்தோடும் ஆவியுடன் கூட வேலை செய்திருப்பாள், அத்தோடு தேவனுக்கு தன்னுடைய சொந்த கைகளினால் இந்த சிறந்த சேவையை செய்யவும் உணர்த்தப்பட்டிருப்பாள். தேவன் இப்படிப்பட்ட சரீரப்பிரகாரமான கரியங்களை ஆராதனையின் பகுதியாகவும் மேலும் சரீர கரங்களால் செய்யக்கூடிய இந்த வேலையை தேவன் தீர்மானித்துள்ளார். அவளுடைய கரங்கள் அந்த நாளில் கர்த்தருக்கென்று இப்பேர்பட்ட சேவை செய்ய அவள் கண்டிப்பாக அவள் உத்வேகத்துடன் செயல்பட்டிருப்பாள்.

இந்த பாத்திரங்கள் வழக்கமாக யூதர்களால் ஆராதனையில் தங்கம் மற்றும் வெள்ளியினால் குறிப்பாக வடிவமைக்கப்பட்டு அர்ப்பணம் செய்யப்பட்டிருக்குமென நான் நிச்சத்திருக்கிறேன், பிறகு இவைகளை தேவாலயத்திற்கென்று தனியாகப் பயன்படுத்தவும் கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய மரணத்தையும் அவருடைய அடக்கத்தையும் வர்ணிப்பதில் மிகுந்த கவனத்துடன் இந்த பாத்திரங்களைப் பயன்படுத்துவதில் அக்கறைசெலுத்தினர். அவர்கள் சர்வ சாதாரணமாகவோ, அரைமனதுடனோ இந்த பாத்திரங்களை சுத்தம் செய்வதில் ஈடுபட்டிருக்கமாட்டார்கள்.

மாறாக இது ஆராதனையில் ஒரு பகுதியாக இருந்தபடியினால் தங்களுடைய சொந்த நேரத்தை தேவனுடைய திருவிருந்தில் பங்குகொள்ளுவதற்காகவும் யாரெல்லாம் ஆயத்தம் பண்ணினார்களோ அவர்கள் அதை தங்களுடைய சிறப்புரிமையாக எண்ணினார்கள்.

தேவன் சரீரப் பிரகாரமான ஒவ்வொரு செயலில் செய்தது போல, ஆராதனை செய்யும் இடத்தை சுத்தம் செய்வதிலும், சுகமில்லாதவர்களுக்கு உணவு தயாரிப்பதில் அதே மனநிலையை கொண்டிருத்தலும் வேண்டும். எவ்விடத்திலெல்லாம் தேவன் தம்முடைய வேலையைச் செய்யும்படி மனிதகரங்களை நாடுகிறாரோ, அங்கெல்லாம் சந்தோஷத்துடன் அவர்கள் தனிப்பட்ட அழகான ஆராதனை என தங்களை அந்த சேவைக்கு ஒப்புக் கொடுத்தார்கள்.

நாம் குறுகிய பார்வைகொண்டிருந்தபோது எவ்வளவு காரியங்களை இழந்திருக்கிறோம், நாம் தேவனோடு நெருக்கமான உறவுக்குரிய சிறந்த வாய்ப்புகளை காணத் தவறியிருக்கிறோம்.

## பொது அறிவு சோதனை

1. தமிழ் நாட்டின் நுழைவாயில் எனப்படுவது எது?
   அ) சென்னை ஆ) கோவை இ) தூத்துக்குடி
2. இளம்பிள்ளை வாத தடுப்பு மருந்தைக் கண்டு பிடித்தவர் யார்?
   அ) வில்சன் ஆ) ஜோன்ஸ்சால்க் இ) லூயிஸ்
3. பசுமை புரட்சியின் தாயகம் எது?
   அ) மெக்ஸிகோ ஆ) தைவான் இ) தென்கொரியா
4. உலகின் முதல் செயற்கைகோளை உருவாக்கிய நாடு எது?
   அ) ரஷ்யா ஆ) அமெரிக்கா இ) ஜப்பான்
5. 9-வது ஆசிய கோப்பைபோட்டி எந்த நாட்டில் நடைபெறும்?
   அ) இந்தியா ஆ) பாகிஸ்தான் இ) இலங்கை

**விடை 1. தூத்துக்குடி 2. ஜோன்ஸ்சால்க் 3. மெக்ஸிகோ 4. ரஷ்யா 5. பாகிஸ்தான்**




**தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்துவோம்!**

***ஒருவருக்கு ஒரு நாளைக்கு குடிக்க, குளிக்க, சமைக்க, துணிகளை துவைக்க 50 லிட்டர் தண்ணீர் தேவைப்படுகிறது.***



பெண்கள் பகுதி

# கர்த்தரைக் குறித்தே மேன்மைபாராட்டுவோம்

## *Let`s Boast In The Lord*

*-Glory Arjunan*

அன்பு சகோதரிகளே, நாம் எப்போதும் கர்த்தரைக் குறித்தே மேன்மைபாராட்டகடவோம். கர்த்தர் நமக்கு செய்த நன்மைகள் ஏராளம் எனவே அவரைக் குறித்தும், அவரது மீட்பைக் குறித்தும், அவரது வல்லமையைக் குறித்தும், அவரது மகத்துவங்களைக் குறித்தும், கர்த்தருடைய சிலுவையைக் குறித்தும் மேன்மைபாராட்டுவோம். ஏனெனில் அவரே நமக்கு எல்லாமுமாக இருக்கிறவர்.

பொதுவாக ஸ்திரீகளாகிய நமக்குள்ளே நம்மைக்குறித்தும், நம்முடைய உயர்வான வாழ்க்கைத் தரம், நம்முடைய குடும்பம், சிலவேளைகளில் நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சி போன்றவைகளைக் குறித்தும் மேன்மையான எண்ணம் கொண்டவர்களாக இருப்போம். ஆனால் தேவன் இவ்விதமான மேட்டிமையான எண்ணங்களை விரும்புகிறதில்லை. எரேமியா தீர்க்கன் கூறுவதை கவனிப்போம், "ஞானி தன் ஞானத்தைக் குறித்து மேன்மைபாராட்ட வேண்டாம்; பராக்கிரமன் தன் பராக்கிரமத்தைக் குறித்து மேன்மைபாராட்டவேண்டாம்; ஐசுவரியவான் தன் ஐசுவரியத்தைக் குறித்து மேன்மைபாராட்டவேண்டாம்; மேன்பாராட்டுகிறவன் பூமியிலே கிருபையையும் நியாயத்தையும் நீதியையும் செய்கிற கர்த்தர் நான் என்று என்னை அறிந்து உணர்ந்திருக்கிறதைக் குறித்தே மேன்மைபாராட்டக்கடவன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; இவைகளின்மேல் பிரியமாயிருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே.9:23,24).

**ஞானிகளைப் பார்த்து தன் ஞானத்தைக் குறித்து மேன்மைபாராட்டாதே** என கர்த்தர் கட்டளையாகக் கூறுவதைக் காணலாம். ஞானிகளை குறித்து ரோமர் 12:16 ல் "...உங்களையே புத்திமான்களென்று எண்ணாதிருங்கள்" என மேட்டிமையான எண்ணம் கொண்டவர்களைக் குறித்து பவுல் எச்சரிக்கிறார். நாம் புத்திமான்கள் அல்ல. "கர்த்தர் ஞானத்தைத் தருகிறார்; அவர் வாயினின்று அறிவும் புத்தியும் வரும்" (நீதி.2:6). அவரே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார் (1கொரி.1:31). ஒருவேளை நாங்கள் ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணுகிற ஞானிகள் எனக் கூறி மேன்மைபாராட்டலாம். ஆனால் ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துகிற ஞானமும் கர்த்தரிடத்திலிருந்து தான் வருகிறது என்பதை மறந்து விடக்கூடாது. எனவே நமக்கு ஞானத்தைக் கொடுத்துள்ள கர்த்தரைக் குறித்தே மேன்மைபாராட்டுவோம்.

**பராக்கிரமன் தன் பராக்கிரமத்தைக் குறித்து மேன்மைபாராட்டவேண்டாம்** என்று கர்த்தர் மேலும் கூறுகிறார். யார் பராக்கிரமன்? தான் ஒரு பெரிய ஆள். என்னால் தான் என் குடும்பமே நன்றாக இருக்கிறது நான் நினைத்தால் எதையும் சாதித்துவிடுவேன் என்று தன்னைக் குறித்து பெருமைப்படுகிறவர்கள் அநேகர் இங்கே கடைசி தீர்க்கதரிசியாகிய யோவான் ஸ்நானகன் இயேசுவைக் குறித்து கூறும்போது "அவன்; என்னிலும்